# மாணிக்கவாசகரின் ஆன்மப் பயணம்

***அ. தீபா***
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ் உயராய்வு மையம்
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

மலர்: 11

சிறப்பிதழ்: 1

மாதம்: ஏப்ரல்

வருடம்: 2024

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS1-April.7737

***ஆய்வுச்சுருக்கம்***

*அருளாளர்களின் இறை அனுபவம் நாடு, மொழி, எல்லை, கடந்தது. எல்லை இல்லாத இன்பப்பொருளாகிய இறைவனுடன் உயிரானது ஒன்றுகின்ற பல்வேறு படிநிலைகளை எடுத்து இயம்புவது. பொறி,மனம், இவற்றின் தொடர்பு இன்றி உயிர் இறைவனுடன் நேரடியாகக் கலக்கும் தொடர்பினை விளக்குவது ஆகும். இவ்வாறு இறையருளோடு ஒன்று கலந்த உயிர் இன்பம் துய்த்து விளங்கும் நிலை அருளிய வாழ்வின் முடிந்த நிலையாகும். இந்நிலையில் இறைவன் வேறு, உயிர் வேறு, என்ற வேறுபாடு இல்லாமல் அத்துவிதக் கலப்பு கொண்டு விளங்கும். இறை அருளைப் பெற்று இறைமயமாக விளங்கி, இறை இன்பம் துய்த்து, விளங்கும் நிலை ஆன்மப் பயணத்தின் முடிந்த நிலையாகும். இத்தகு ஆன்மப் பயணத்தை மாணிக்கவாசகர் எவ்வாறு மேற்கொண்டார் என்பதை ஆராய்வதாக இவ் ஆய்வுக் கட்டுரை அமைகின்றது.*

***நுழைவுரை***

மாணிக்கவாசகரின் திருவாசகமானது உலகிலுள்ள எல்லா ஆன்மாக்களும் செய்து கொண்டிருக்கின்ற, செய்ய வேண்டிய இன்றியமையாப் பயணம் பற்றிப் பேசுவதாகும். இவ்உலக வாழ்வில் சிக்கிச் சுழலாமல், முழுமுதற் பரம்பொருளாகிய சிவபெருமானின் திருவடி நிழலில் இன்புறுவதற்காக மேற்கொள்ளும் பயணமே ஆன்மப் பயணம் ஆகும். பல பிறவிகளில் பிறந்து, பட்டு, உழன்று, துன்புற்று அடைய வேண்டிய துன்பங்கள் அனைத்தையும் ஒரே பிறவியில் அடைந்து உய்கதி பெற்ற மாணிக்கவாசகர் தம் வாழ்வில் மேற்கொண்ட ஆன்மப்பயணம் பற்றி விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### பிறப்பும் அமைச்சுப் பொறுப்பும்

மாணிக்கவாசகர் மதுரை அருகே திருவாதவூரில் பிறந்தவர். இளவயதிலேயே கலைஞானத்தோடு விளங்கினார் மாணிக்கவாசகர். கல்வி என்னும் பல்கடல் பிழைத்தும் என அவரே கூறுவதிலிருந்து இதனை அறியலாம். மாணிக்கவாசகரின் கல்வித்திறன் முதிர்ச்சியால் நாட்டை ஆண்ட அரிமர்த்தன பாண்டியன் அவரைத் தனது முதல் முந்திரியாக ஆக்கிக் கொண்டார்.

மாணிக்கவாசகரின் சிறப்பை உணர்ந்த மன்னன் அவருக்குத் தென்னவன் பிரமராயன் என்ற பட்டத்தை வழங்கினார். நாட்டுப் பாதுகாப்பு கருதி, படைகள் சிறக்கக் குதிரைகள் வாங்கி வர மாணிக்கவாசகரைத் தேர்ந்தெடுத்தார். மாணிக்கவாசகரும் அரண்மனைக் களஞ்சியத்தில் பொருளை வாங்கிக் கொண்டு குதிரைகள் வாங்குவதற்காகத் திருக்கானப்போர் வழியாகத் திருப்பெருந்து றையை அடைந்தார்.

## உபதேசமும் - உண்மை விளக்கமும்

பெருந்துறையை வந்தடைந்த மாணிக்கவாச கர் அங்கு ஒரு சோலையில் இருந்த மரத்தடியில் மாணவர்களாகிய அடியவர்கள் சூழ, ஓர் ஞானாசிரியன் அமர்ந்திருப்பதைக் கண்டு அங்கு சென்றார். ஞானாசிரியனாக அங்கு வீற்றிருந்தவர் இறைவன் சிவ பெருமானே என்பதை அறிந்து கொண்டார். இறைவன் தமக்கு அருள்புரியவே மனித உருவில் வந்துள்ளார் என்பதை உணர்ந்து அவரது திருவடியில் வீழ்ந்தார்.

இறைவனின் உண்மைத் தன்மையைத் தெரிந்து, அவர் தமக்கு அருள் புரிந்ததைப் பல பாடல்களில் குறிப்பிடுகின்றார்.

திருப்பெருந்துறையில் மாணிக்கவாசகர் கண்ட இறைக் காட்சியே அவரது ஆன்மப் பயணத்தின் தொடக்கமாக அமைந்தது எனலாம்.

## ஆன்மப் பயணம்

இவ் உலக வாழ்விலும், பொறி புலன்களின் பிடியிலும் சிக்கி விடாமல், இறைவன் திருவடி இன்பமே மெய்யான இன்பம் என உணர்ந்து அவ்இன்பத்தைப் பெறுவதற்காக மேற்கொள்ளப் படுவதே ஆன்மப் பயணமாகும். திருவாதவூராரின் திருப் பெருந்துறைப் பயணம் வெறும் குதிரை வாங்கப் புறப்பட்ட யாத்திரை என்ற கூற முடியாமல், அவருடைய ஆன்மயாத்திரை எனக் கூறும் வகையில் அமைந்துள்ளது[1] என அ.ச.ஞானசம்பந்தன் கூறுவது இங்கு எண்ணத்தக்கது.

## உணர்வு மாற்றமடைதல்

ஆன்மப்பயணம் மேற்கொண்ட மாணிக்கவாசகர் பெருந்துறையை அடையும் போதே ஒருவகை மாற்றத்தை அடைகின்றார். தம்முள் ஒரு மாற்றம் நிகழ்வதை அவரே உணருகின்றார்.

இத்தகு திடீர் மாற்றம் அடைந்த மற்றொரு பெரியார் கண்ணப்ப நாயனார் ஆவார் - திருவாதவூரார், திண்ணனார் இருவருடைய ஆன்மப் பயணத்திலும் இம்மாற்றம் எதிர்பாரா வகையில், எதிர்பாரா இடத்தில் நிகழ்ந்தது. திண்ணனார், நாணன் என்ற ஏவலாளியுடன் குடுமித் தேவரைத்தரிசிக்கக் காளத்தி மலைக்குச் செல்கிறான். அம்மலையை நெருங்க, நெருங்கத் தம்முள் ஒரு மாற்றம் நிகழ்வதை உணர்ந்து,

1. அ.ச.ஞானசம்பந்தன், மணிவாசகர், பக்.82,86.
2. சேக்கிழார், கண்ணப்ப நாயனார்புராணம், பா.97.

**ஆவதென் இதனைக் கண்டு? இங்கு அணைதொறும்**
**என்மேற் பாரம்போவ தொன்று உளது போலும்[2]**

என மொழிகின்றார்.

## இறைவனின் உளக்குறிப்பு

குருந்த மரத்தடியில் குருவாக எழுந்தருளியுள்ள பரமனது திருவருளைப் பெற்றதுமே மணிவாசகர் வீடுபேறு பெறுவதற்கான முழுத்தகுதியும் பெற்று விடுகின்றார் என்னும், இறைவனின் திருவருட்குறிப்பு அவர் இம்மண்ணுலகத்திலே சிறிது காலம் இருக்க வேண்டும் எனக் கருதியது போலும் என மாணிக்கவாசகரே பல இடங்களில் குறிப்பிடுகின்றார்.

**வண்ணந்தான் அதுகாட்டி வடிவுகாட்டி**
**மலர்க்கழல்கள் அவைகாட்டி வழியற்றேனைத்**
**திண்ணந்தான் பிறவாமல் காத்தாட் கொண்டாய்[3]**

என்று பெருந்துறையில் ஈசன் தமக்கு அருளிய திறம் குறித்துப் பேசும் அடிகளார், இவ்வாறு ஆட்கொள்ளப் பெற்றும் இறைவன் தம்மை உடன் அழைத்துச் செல்லாமல் இங்கேயே இருக்குமாறு பணித்து மறைந்தான் என்பதை

**அரத்த மேனியாய் அருள்செய் அன்பரும்**
**நீயும் அங்கு எழுந்தருளி இங்கெனை**
**இருத்தினாய் முறையோ என் எம்பிரான்** [4]

எனும் பாலடிகளால் அறியலாம்.

**இறைவனைச் சரணடைதல்**

தம்மிடம் ஏதோ குறை இருப்பதால்தான் இறைவன் தம்மை ஒதுக்கிப் போய்விட்டான் என வருந்தும் மாணிக்கவாசகர், பின்னர் தம்மை இருக்கச் செய்ததிலும் ஏதோ காரணம் இருக்கிறது என்பதை உணருகின்றார். எனவே, 'தம்மை அழைத்துக் கொள், 'விட்டுப்போ" என்று கூறுவதற்குத் தமக்குத் தகுதி இல்லை என்பதை உணர்ந்து, இறைவனிடம் முழுமையாகச் சரணடைந்து, இனி 'எல்லாம் அவன் செயல்" என்ற முடிவுக்கு வருகின்றார்.

**வேண்டத் தக்கது அறிவோய் நீ**
**வேண்ட முழுதும் தருவோய் நீ**
**வேண்டும் அயன்மாற் கரியோய் நீ**
**வேண்டி என்னைப் பணிகொண்டாய்**

3. மாணிக்கவாசகர், திருச்சதகம், பா.25
4. மாணிக்கவாசகர், திருச்சதம், ஆனந்தாதீதம்

**வேண்டி நீயா தருள் செய்தாய்**
**யானும் அதுவே வேண்டின் அல்லால்**
**வேண்டும் பரிசொன் றுண்டென்னில்**
**அதுவும் உன்தன் விருப்பன்றே**[5]

என இறைவனிடமே அனைத்தையும் விட்டு விடுகின்றார்.

மாணிக்கவாசகருக்கு ஏதோ ஒரு பணியைத் தரும் பொருட்டே இறைவன் திருப்பெருந்துறையில் 'அவரை இருக்க" எனப் பணித்தான் எனக் கருதலாம். இதே போன்றதொரு நிகழ்வினைச் சிலப்பதிகாரத்திலும் காணலாம்.

வெட்டுண்டு கிடக்கும் தம் கணவனைக் கண்டு, அவ்உடல் மேல் விழுந்து அரற்றி அழுகின்றாள் கண்ணகி. உடனே துண்டாகிய உடல் ஒன்று சேர்ந்து, கோவலன் உயிர்த்தெழுந்து அவள் கண்ணீரைத் துடைத்தான். வேறு எதுவும் கூறாமல்,

**'எழுதெழில் மலர் உண்கண் இருந்தைக்க**[6]

என்று கூறிச் சென்று விடுகின்றான்.

கோவலன் கண்ணகியை 'இரு" என இருத்தியதால் தான் 'வழக்குரை காதை" தோன்றியது. அது போல, இறைவன் மாணிக்கவாசகரை 'இரு" எனப் பணித்த தால் தான் 'திருவாசகம்" எனும் நூல் பிறந்தது.

**ஆன்மப் பயணத்தில் ஏற்படும் தடைகள்**

இன்றைய உலக வாழ்வில் நடைபெறும் போராட்டத்தை அன்றே அறிந்தவர் போல, படம் பிடித்துக் காட்டுகின்றார் மாணிக்கவாசகர். ஆன்ம யாத்திரை எத்துணைத் துன்பம் நிறைந்தது என்பதைப் 'போற்றித் திருஅகவலில்" வரிசைப்படுத்துகிறார். தாயின் கருவில் குழந்தை உருவான நாள் முதல், அத்தாய்க்கு நேரும் துன்பங்களையெல்லாம் தாண்டிப்பிறந்தகுழந்தை, பின்வளரும்போது அடையும்துன்பங்கள்வரிசைப்படுத்தப்படுகின்றன.7

**செல்வமும் கூட ஆன்மப் பயணத் திற்குத் தடை ஏற்படுத்தும் - செல்வத்தை விட வறுமை கொடியது. அதுவும் பயணத்தைத் தடை செய்யும் என்பதை, செல்வம் என்னும் அல்லலிற் பிழைத்தும் நல்குரவு என்னும் தொல் விடம் பிழைத்தும்.**[8]

என உரைக்கின்றார்.

5. மாணிக்கவாசகர், குழைத்த பத்து, பா.6
6. சிலப்பதிகாரம், ஊர்சூழ்வரி, அடி-67
7. மாணிக்கவாசகர், போற்றித் திருஅகவல், அடிகள் 13-25.
8. மாணிக்கவாசகர், போற்றித் திருஅகவல், அடிகள் 38-39.

எது பற்றியும் கவலைப்படாமல் இருப்பவர், எவ்விதத் தொல்லையும் இன்றி

இருப்பதும்; இறையுணர்வு பெற்றுச் சரண் புகுகின்றவர்கள் அனைத்துத் துன்பங்களுக்கும் ஆளாவதையும் இவ்வுலகில் காணலாம்.

**நம்மாழ்வாரும் இதனைக் கண்டு அதிசயித்து,**
**நண்ணாதார் முறுவலிப்ப நல்லுற்றார் கரைந்து ஏங்க**
**எண்ணாராத் துயர் விளைக்கும் இவை என்ன உலகியற்கை?[9]**

என்று பாடுவது இங்கு ஒப்பிடத்தக்கது.

## பிறவியே துன்பத்திற்குக் காரணம்

ஆன்மப் பயணம் சிறக்க மாணிக்கவாசகர் எளிய வழியொன்றைக் கூறுகின்றார். ஆன்மப் பயணத்தில் பொறிபுலன்களை அடக்கித்தான் செல்ல வேண்டுமெனில், அதிலேயே வாழ்நாளில் பெரும்பொழுது கழிந்து விடும். பிறவியே எல்லாத் துன்பங்களுக்கும் காரணம் என்பதை அறிந்து, அப்பிறவியை நீக்க வேண்டும். பிறவியை நாமாகப் போக்கிக் கொள்ள முடியாது. எனவே, பிறவி இல்லாதவன் துணை கொண்டுதான் பிறவியைப் போக்க முடியும் என்று உணர்ந்த பிறகும், பொறிகள் ஆன்மப் பயணத்தைத் தடை செய்கின்றன என்கிறார் மாணிக்கவாசகர்.

ஆன்மப் பயணம் மேற்கொண்ட மாணிக்கவாசகர் தமது திருவாசகத்தில் யாத்திரை பத்து என்று ஒரு பதிகமே அருளியிருப்பதும் இங்கு எண்ணத்தக்கது.

## நிறைவுரை

திருவாதவூரார் என்ற பாண்டியப் பேரரசின் தலைமை அமைச்சரை ஓர் ஆன்ம யாத்திரை புறப்படுமாறு செய்து, திருப்பெருந்துறை சேர்ந்தவுடன் அவரை மாணிக்கவாசகராக மாற்றி, நம் போன்ற ஆன்மாக்கள் எத்துணைத் துன்பங்களை வழியில் சந்திக்குமோ, அவை அனைத்தையும் மாணிக்கவாசகரைச் சந்திக்கச் செய்து, இத்துணைத் துன்பங்களைச் சந்தித்தாலும் இறுதியில் உய்கதி உண்டு என்பதைக் காட்டி, உய்கதி பெற்றவர்கள் - எத்தகைய இன்பத்தை அனுபவிப்பார்கள் என்பதையும் விளக்குமாறு செய்தார் இறைவன் என மாணிக்கவாசகரின் ஆன்மப் பயணம் பற்றிக் குறிப்பிடுவார் ச.சாம்பசிவனார்[10]

இவ்வாறு பலவித அனுபவங்களுடன் ஆன்மப்பயணம் செய்த அடிகளார் திருவாசகம் என்ற ஒப்பற்ற அனுபவப் பிழிவைத் தந்து விட்டுக் கூத்தப் பெருமானையே பொருளென்று காட்டி, அவனுடன் சோதியில் கலந்தார் என்பதை அவரது வரலாற்றின் மூலம் அறியலாம்.

9. நம்மாழ்வார், திருவாய்மொழி, 4-9-1
10. ச.சாம்பசிவனார், திருவாசகத்தில் சைவ சித்தாந்தக் கருத்துகள், பக.75.

## துணைநூற்பட்டியல்


1. சு.அருள்அம்பலவாணர் திருவாசக ஆராய்ச்சியுரை பாரிநிலையம். 184, பிராட்வே, சென்னை -18.
2. ஆ.ஆனந்தராசன்சிவஞானபோதம் வழித்துணை விளக்கவுரை, அருள்நந்தி சிவம் அருட்பணி மன்றம் வெளியீடு, 78, செல்வி நகர், சிந்துபூந்துறை, திருநெல்வேலி
3. ஊரன் அடிகள் (பதிப்பாசிரியர்) திருவருட்பா முதல் - ஐந்து திருமுறைகள் இராமலிங்கர் பணி மன்றம், 31, போயஸ் தோட்டம், சென்னை - 86. மு.கதிரேசன் செட்டியார் திருவாசகம் நீத்தல் விண்ணப்பம் சன்மார்க்க சபை, மேலச்சிவல்புரி.
4. அ.மு.சரவண முதலியார் அமுது அடி அடைந்த அன்பர். மணிவாசக மன்றம், அரியலூர், முதற்பதிப்பு - 1956.
5. ச. சாம்பவனார் திருவா கத்தில் சைவசித்தாந்தக் கருத்துகள் வளவன் வெளியீடு மதுரை - 625 001. முதற்பதிப்பு - செப்.1997.